28 ஏப்ரல் 2024
ஈஸ்டர் காலத்தின் 5 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

# மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக பெண்களின் மதிப்பையும் மாண்பையும் கொண்டாடுதல்

# கடவுள் நம்மைக் கத்தரிக்கிறார்

யோவான் நற்செய்தி 15:1-8 இல் இயேசுவின் பிரியாவிடையின் தொடர்ச்சியை காண்கிறோம். இயேசு தம்முடைய அன்பான சீடர்களை அவரின் பிரிவிற்குப்பின் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று உடனடியாகத் தயாரிக்கிறார். திராட்சைக் கொடியையும் அதன் கிளைகளையும் உருவகப்படுத்தி “என்னோடு இணைந்திருங்கள்” என்று கூறுகிறார். இயேசுவே அந்த திராட்சைக் கொடி. அவருடைய தந்தையாகிய தோட்டக்காரரிடம் தன்னை இணைத்துக்கொள்கிறார். கொடியிலிருந்து கிளைகள் வெட்டப்பட்டால் கிளைகள் உயிரோடிருக்காது. இருப்பினும் அதிகக் கனிகளைத் தரவேண்டுமென்றால் ஒவ்வொரு கிளையும் கழிக்கப்படவேண்டும். திராட்சைத் தோட்ட உரிமையாளர் அவருக்கு ஏற்றாற்போல் கிளைகளைக் கத்தரிக்கிறார்.

இயேசு இவ்வாறு கூறியதும், அதற்குப்பின் வரும் நாட்கள் அவரின் சீடர்களுக்கு மிக முக்கியமானவை. கத்தரிப்பது என்றால் என்னவென்று சீடர்களுக்கு விளங்கிற்றா? ஒருவேளை விளங்கியிருக்காது. உயிர்த்தெழுதலுக்கு முன் பயம்; அதன்பின் நம்பிக்கை இழப்பு. இந்தக் கத்தரித்தலின் வழியாக, தெய்வீக வாழ்வு அளிக்கும் உண்மையான திராட்சைக் கொடியான இயேசுவோடு இணைந்து மிகுந்த கனிதரவேண்டுமென்றால், சீடர்கள் துன்பங்களையும் தடைகளையும் தாங்கவேண்டும். இந்த எதிர்ப்புகளைத் தாங்கிக்கொண்டுத் தம்மைப் பின்பற்றுவர்களுக்கு இறைவன் அவரது எல்லையற்ற ஞானத்தைத் தருகிறார்.அவை பிற்காலத்தில் மேலும் அதிக பலனைத் தரவேண்டுமென்பதே அவரது ஆசை.

உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் நடக்கும் நிகழ்வு - பவுல் தம்முடைய மனமாற்றத்திற்குப் பிறகு உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நம்பிக்கையாளர்கள் அவருக்கு அஞ்சுகிறார்கள். ஆனால் பர்னபாவின் வழிகாட்டுதலின்படி பவுல் ஆண்டவரின் மிகப்பெரிய சீடர்களில் ஒருவராக மாறுகிறார். பவுல் எதிர்ப்புகளை சந்தித்தாலும், கிறிஸ்துவை துணிவோடு அறிவித்து தம்முடைய கனிகளால் அறியப்படுகிறார். மேலும் தூய ஆவியாரின் ஆற்றலால் திருஅவை எண்ணிக்கையில் பெரிதும் வளர்ந்தது.

இன்று நாம் எடுத்துச் செல்வது என்ன? திருமுழுக்கின் வழியாக நாம் கிறிஸ்துவோடு இயல்பாகவே உறவைக் கொண்டுள்ளோம். நாம் அவரோடு இணைந்துள்ளோம். மேலும் அவரின் வார்த்தைகளாலும் அருளடையாளங்களாலும் வலுவூட்டப்பெறுகிறோம். பவுலைப் போலவே, நம்முடைய வாழ்க்கையும், இயேசுவுக்கும் அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் சாட்சிகளாக இருக்கவேண்டும். துன்பங்களை எதிர்கொண்டாலும், அந்தத் துன்பம் தண்டனைக்குரியது அல்ல; மாறாக உருமாற்றத்திற்கானது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

கடவுள் நம்மை இங்கும் அங்கும் அவரின் தேவைக்கேற்றவாறு கத்தரித்துவிடுகிறார். ஏனென்றால் உண்மையான திராட்சைக் கொடியின் சாயலாக நம்மை வடிவமைக்க விரு,ம்புகிறார். “நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். ஒருவர் என்னுடன் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்”

பெண்களிடம் இருப்பது உலகத்திற்கு தேவையில்லை. பெண்களாக இருப்பது தான் தேவை.

– புனித சிலுவையின் புனித திரேசா பெனடிக்டா (எடித் ஸ்டெய்ன்)







**இன்றைய இறைவார்த்தை:**

திப: 9: 26-31

திருப்பாடல்: 21: 26-28, 30-32

1 யோவான் 3: 18-24

யோவான் 15:1-8

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org